
## சாலை விபத்து: இதுவரை 9 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.90 இலட்சம் வழங்கல்!

# திருநெல்வேலி பி.மேகலிங்கம் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம் நிவாரண நிதி!

## தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ. 6-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த திருநெல்வேலி மேற்கு மாவட்டம் பி.மேகலிங்கம் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூ. 10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 9 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**



மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்ச்செல்வன் ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் திருவாரூர் மாவட்டத்தைச் எம்.விக்னேஷ் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் ஆகிய 8 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான பி.மேகலிங்கம் அவர்கள், கேரள மாநிலம், கோனி சென்ட்ரல் ஜங்ஷன் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது வாகன விபத்தில் சிக்கி உயிரிழந்த மேற்சொன்ன பி.மேகலிங்கம் குடும்ப நிவாரண நிதியாக,

ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் அவர்களின் மனைவி திருமதி எம்.செல்வி அவர்களிடம் நேற்று (04.11.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

---

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை,
### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை!

## நாமக்கல்லில் 69 கழக உறுப்பினர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி!

### அமைச்சர் மா.சுப்ரமணியன் வழங்கினார்!

நாமக்கல், நவ. 6 -

நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயம், பேராசிரியர் கூட்டரங்கில் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் த லை வ ரு ம ா ன மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழியில், நாமக்கல் ஒன்றியத்தில் மறைந்த 69 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநகராட்சி மேயர் து.கலாநிதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் கலந்து கொண்டு மறைந்த 69 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதியை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட அவைதலைவர் சி.மணிமாறன், மாநில மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராணி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர் மன்ற, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

---

### அமைச்சர்கள் கே.என்.நேரு, முனைவர் கோவி.செழியன் பங்கேற்பு!

## தஞ்சை வடக்கு மாவட்டம் - "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், நவ. 6 -

தஞ்சைவடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் "என் வாக்குச்சாவடி. வெற்றி வாக்குச் சாவடி" பி.எல்.ஏ2, பி.டி.ஏ ஆலோசனைக் கூட்டம் கும்ப கோணத்தில் நடைபெற உள்ளதாக தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

நாளை 07.11.2025 வெள்ளிக் கிழமை மாலை 04.00 மணிக்கு கும்பகோணம், செட்டிமண்டபம் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள மகாலெட்சுமி மஹாலில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் கழகத் தலைவர் - திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு அமைய "என் வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச் சாவடி" என்ற முன்னெடுப்போடு தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் ஆகிய தொகுதிகளின் உள்ள கழக பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ2) பாக டிஜிட்டல் முகவர்கள் (பி.டி.ஏ) ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

அதுசமயம் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் - நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ2, பி.டி.ஏ அனைவரும் குறித்த நேரத்தில் கலந்து கொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

## வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் அடங்கியுள்ள சட்டமன்றத் தொகுதிகள் - மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் வேலூர் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்டு, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு ஆகிய இரண்டு மாவட்டக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

| மாவட்டம் | மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் | பொறுப்பாளர் |
|---|---|---|
| வேலூர் தெற்கு | வேலூர்<br>அணைக்கட்டு<br>குடியாத்தம் | திரு. ஏ.பி.நந்தகுமார்,<br>எம்.எல்.ஏ., |
| வேலூர் வடக்கு | காட்பாடி<br>கீழ்வைத்தியணான்<br>குப்பம் | திரு. டி.எம்.கதிர்ஆனந்த்,<br>எம்.பி., |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 04.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### கா.ராமச்சந்திரன் முன்னிலையில்

## நீலகிரி மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

### தென்றல் செல்வராஜ் - பரமேஸ்குமார் - திராவிட மணி பங்கேற்பு!

நீலகிரி, நவ.6-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அவர்கள் அனைவரையும் வரவேற்றார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் , தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஸ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, லியாகத் அலி, செல்வம், உதயதேவன், மோகன்குமார், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், முத்து, ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், கோமதி, ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ஆலன், விவேகானந்தன், ரஹமத்துல்லா, ஜெயந்தி, வெங்கடேஷ், பவீஷ், செந்தில்நாதன், ஜெயகுமார், சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, நாகராஜ், முரளிதரன், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, சித்ரா தேவி, வள்ளி, ராதா, சத்தியவாணி, பங்கஜம், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், உட்பட கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். மாவட்ட பொருளாளர் நாசர் அலி நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நீலகிரி மாவட்டத்தில் SIR தீவிர வாக்காளர் சரிபார்ப்பு பணியில் கழக தோழர்கள் முனைப்புடன் ஈடுபடுவோம்!.

2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, கேரளம் உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்ட SIR பணி மேற்கொள்ளப்படும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க., அரசின் தூண்டுதலில் தேர்தல் ஆணையம் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் இந்த சதி செயலில் ஈடுபட துவங்கியுள்ளது.

நேர்மையான தேர்தலை நடத்தவேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை, ஆனால் வாக்காளர் சரிபார்ப்பு பணிகளுக்கு உரிய கால அவகாசம் கொடுக்க வேண்டும். எவ்வித பதற்றமும் இல்லாத சூழலில்தான் இந்த பணிகளை செய்ய வேண்டும். மாறாக தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் உள்ள நிலையில் முழுமையான வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை மேற்கொள்ள நினைப்பது உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் மட்டுமே ஆகும்.

ஒன்றிய அரசால், ஜனநாயகத்திற்கு தாக்குதல் ஏற்படும் அனைத்து காலகட்டத்திலும் முதலில் இதறக்கு எதிராக குரல் கொடுப்பது திமுக என்பதில் நம் அனைவருக்கும் பெருமையாகும்.

இந்நிலையில் SIR எனும் தீவிர வாக்கு சரிபார்ப்பு பணியில் ஒவ்வொரு கழக தோழர்களும் விழிப்புடன் செயல்பட வேண்டும் என நம் கழக தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை, கூடலூர், குன்னூர் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெறும் இப்பணியில் ஒவ்வொரு வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA 2 தவறாது வீடு வீடாக சென்று வாக்காளர் சரிபார்ப்பு பணியில் முனைப்புடன் ஈடுபட இக்கூட்டம் கேட்டுக்கொள்வதுடன், BLA 2 அனைவரும் செல்வதை ஒவ்வொரு நாளும் அந்தந்த நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் உறுதி செய்திட இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி பூத் பரப்புரை

கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 28.10.2025 அன்று சென்னையில் என். வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச்சாவடி எனும் பயிற்சி பட்டறை நிகழ்ச்சியை சிறப்புடன் நடத்தி, எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பில் அமர்ந்திட தேவையான கழக நிர்வாகிகள், தோழர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்கள்.

அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சிகளை தலைமை கழகம் வழங்கும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சிறப்புடன் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

---

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்ட திட்ட விதி: 17 பிரிவு : 3ன்படி

முனைவர் **க.பொன்முடி**, எம்.எல்.ஏ.,

மாண்புமிகு **மு.பெ.சாமிநாதன்** ஆகியோர்

**தி.மு.க. துணைப் பொது செயலாளர்களாக** நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 04.11.2025

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்
தி.மு.க.

---




கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், (பூத்) பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மு.வாசிம்ராஜா முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ச.கார்த்திகேயன், வடவள்ளி குப்புசாமி, தங்கம் சந்திரசேகர், சரஸ்வதி புஷ்பராஜ், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மறை, பகுதி பொறுப்பாளர்கள் வ.ம.சண்முகசுந்தரம், பரணி பாக்கியராஜ், பாலசுப்பிரமணியம், கிருஷ்ணராஜ், கே.எம்.ரவி, ஜெயசந்திரன், ராமச்சந்திரன், கோவை லோகு உள்பட வட்டக் கழக செயலாளர்கள், (பூத்) பாகப் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.